# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 44

## அறிவிப்புகள்

## 2023 - 2024


**தா.மோ. அன்பரசன்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 43 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

**1. சென்னை, கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் டான்சிக்கு சொந்தமான 3.08 ஏக்கர் நிலத்தில் தமிழ்நாடு சிட்கோ கூட்டு முயற்சியில் சுமார் 200 தொழில் முனைவோருக்கு உடன் பயன்படத்தக்க (Plug and Play) அடுக்குமாடி தொழில் வளாகம் ரூ.175 கோடி செலவில் உருவாக்கப்படும். இதன் மூலம் சுமார் 2200 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.**

சென்னை, கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் டான்சிக்கு சொந்தமான 3.08 ஏக்கர் நிலத்தில் சுமார் 2 இலட்சம் சதுர அடி கட்டிட பரப்பளவில் தமிழ்நாடு சிட்கோ கூட்டு முயற்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோருக்கு உடன் பயன்படத்தக்க (Plug and Play) வகையில் கீழ்தளம் மற்றும் மூன்றடுக்கு தளங்களுடன் உரிய வசதிகள் கூடிய அடுக்குமாடி தொழில் வளாகம் சுமார் 200 தொழிற்கூடங்களுடன் ரூ.175 கோடி செலவில் உருவாக்கப்படும். இதன் மூலம் சுமார் 2200 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இத்திட்டம் டான்சியின் நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

2. **தமிழ்நாடு சிட்கோ மூலம், குறுந்தொழில் முனைவோர்களின் தேவையை பூர்த்தி செய்ய 48,000 சதுர அடி பரப்பளவில் சுமார் 350 நபர்களுக்கு நேரடியாகவும் 200 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய வகையில் ரூ.26.24 கோடி திட்ட மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் (ஜூஜுவாடி) தொழிற்பேட்டையில் பல அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டப்படும்.**

குறுந்தொழில் முனைவோர்களின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் (ஜூஜுவாடி) தொழிற்பேட்டையில் 48,000 சதுர அடி பரப்பளவில் ரூ.26.24 கோடி திட்ட மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் 3 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் தமிழ்நாடு சிட்கோ மூலம் கட்டப்படும். இத்தொழில் வளாகத்தின் மூலம் 60 குறுந்தொழில் முனைவோர்கள் ஒதுக்கீடு பெற்று பயன்பெறுவர்.

இதன் மூலம் 350 நபர்களுக்கு நேரடியாகவும் 200 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**3. தமிழ்நாடு சிட்கோ மூலம் குறுந்தொழில் முனைவோர்களின் தேவையை பூர்த்தி செய்ய 35,000 சதுர அடி பரப்பளவில் சுமார் 250 நபர்களுக்கு நேரடியாகவும் 150 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய வகையில் ரூ.22.64 கோடி திட்ட மதிப்பீட்டில் மதுரை மாவட்டம், கே.புதூர் தொழிற்பேட்டையில் பல அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் கட்டப்படும்.**

குறுந்தொழில் முனைவோர்களின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் மதுரை மாவட்டம், கே.புதூர் தொழிற்பேட்டையில் 35,000 சதுர அடி பரப்பளவில் ரூ.22.64 கோடி திட்ட மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் 3 அடுக்குகள் கொண்ட அடுக்குமாடி தொழில் வளாகம் தமிழ்நாடு சிட்கோ மூலம் கட்டப்படும். இத்தொழில் வளாகத்தின் மூலம் 45 குறுந்தொழில் முனைவோர்கள் ஒதுக்கீடு பெற்று பயன்பெறுவர்.

இதன் மூலம் 250 நபர்களுக்கு நேரடியாகவும் 150 நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**4. புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கொத்தக்கோட்டையில் 55 ஏக்கரில் சுமார் 2000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய வகையில் ரூ.25.50 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில், வளர்ந்து வரும் தொழில் பகுதியான ஆலங்குடி வட்டம், கொத்தக் கோட்டையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்காக 55 ஏக்கரில் ரூ.25.50 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 2000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**5. செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், முள்ளிக்கொளத்தூரில் 28 ஏக்கரில் சுமார் 1000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய வகையில் ரூ.14 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும்.**

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களிலுள்ள தொழில் முனைவோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம் முள்ளிக்கொளத்தூரில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்காக 28 ஏக்கரில் ரூ.14 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 1000 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

6. **திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், முத்தூரில் 34 ஏக்கரில் சுமார் 1400 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய வகையில் ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை, தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும்.**

திருநெல்வேலி மாவட்டத்தில் வளர்ந்து வரும் தொழில் பகுதியான பாளையங்கோட்டை வட்டம், முத்தூரில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்காக 34 ஏக்கரில் ரூ.15 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 1400 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

7. **காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், வையாவூரில் நலிவடைந்த காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலைக்கு சொந்தமான 43 ஏக்கர் நிலத்தில் சுமார் 1800 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கக் கூடிய வகையில் ரூ.38.70 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும்.**

தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்கும் காஞ்சிபுரம் மாவட்டத்தில், தொழில் முனைவோர்களின் தேவையான தொழில் மனைகளை அளிக்கும் வகையில் காஞ்சிபுரம் வட்டம் வையாவூரில் நலிவடைந்த காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு நூற்பாலைக்கு சொந்தமான நிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர்களுக்காக 43 ஏக்கரில் ரூ.38.70 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும்.

8. **விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம் அயன்கொல்லங்கொண்டானில் 25 ஏக்கரில் சுமார் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய வகையில் ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும்.**

விருதுநகர் மாவட்டத்தில், வளர்ந்து வரும் தொழில் பகுதியான இராஜபாளையம் வட்டம், அயன்கொல்லங்கொண்டானில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்களுக்காக 25 ஏக்கரில் ரூ.15 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

**9. சாதாரண விசைத்தறி கொண்டு இயங்கும் குறு மற்றும் சிறு விசைத்தறி தொழில் நிறுவனங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்த உயர் தொழில்நுட்பம் சார்ந்த நாடா இல்லாத நெய்தலுக்கான பொருத்திகள் (Retrofitting), ஜக்கார்ட் உள்ளிட்டவை நிறுவுவதற்கு 25 விழுக்காடு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.**

உலகளாவிய வர்த்தக சூழலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்தித் திறனை அவ்வப்போது மேம்படுத்துவது இன்றியமையாததாகும். இதனை ஊக்கப்படுத்தும் விதமாக சாதாரண விசைத்தறி கொண்டு இயங்கும் குறு மற்றும் சிறு விசைத்தறி தொழில் நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக நிறுவும் நாடா இல்லாத நெய்தலுக்கான பொருத்திகள் (Retrofitting), ஜக்கார்ட் உள்ளிட்ட பொருத்திகளுக்கு 25 விழுக்காடு முதலீட்டு மானியம் வழங்கப்படும். இதற்கான நிதி தற்போதுள்ள முதலீட்டு மானியத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து செலவிடப்படும்.

10. கிடங்குகள், குளிர்பதன கிடங்குகள், குளிர்பதன போக்குவரத்து மற்றும் சோதனைக் கூடங்கள் உள்ளிட்ட தொழில் துறை சார்ந்த சேவைத் தொழில்களை ஊக்குவிப்பதற்காக 15 விழுக்காடு முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை வழங்கப்படும்.

நீடித்த நிலையான வளர்ச்சிக்கு தொழில் துறை சார்ந்த சேவைத் தொழில்களான குளிர்பதன கிடங்குகள், குளிர்பதன போக்குவரத்து, சோதனைக் கூடங்கள் மற்றும் 10,000 சதுர அடிக்கு மேற்பட்ட கிடங்குகள் உள்ளிட்ட சேவைத் தொழில்களை ஊக்குவிப்பது முக்கியமானதாகும். அத்தகைய தொழில் துறை சார்ந்த சேவைத் தொழில்களை ஊக்குவிப்பதற்காக 15 விழுக்காடு முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூ. 25 இலட்சம் வரை வழங்கப்படும். இதற்கான நிதி தற்போதுள்ள முதலீட்டு மானியத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து செலவிடப்படும்.

**11. அதிக எண்ணிக்கையிலான படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (UYEGP) கீழ் வியாபாரம் சார்ந்த தொழில்கள் தொடங்கிட தற்போதைய திட்ட மதிப்பின் உச்ச வரம்பு ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.15 இலட்சமாக உயர்த்தப்படும். இதற்கான மானியமும் ரூ. 1.25 இலட்சத்திலிருந்து ரூ.3.75 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.**

வேலையின்மை நெருக்கடியைத் தணிக்கவும், உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கத்துடனும் தமிழ்நாடு அரசு, வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) என்ற சுயவேலைவாய்ப்பு திட்டத்தினை தொழில் ஆணையரகம் மூலம் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வியாபாரம் சார்ந்த தொழில்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டு, இத்தொழில்களுக்கு தற்போதைய திட்ட மதிப்பின் உச்ச வரம்பு ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ. 15 இலட்சமாக உயர்த்தப்படும். இதற்கான மானியமும் ரூ. 1.25 இலட்சத்திலிருந்து ரூ. 3.75 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

12. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் சுயவேலைவாய்ப்புத் திட்டங்களான புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகிய திட்டங்களின் மூலம் அதிக எண்ணிக்கையிலான படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உச்ச வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 35 வயதிலிருந்து 45 வயதாகவும், சிறப்புப்பிரிவினருக்கு 45 வயதிலிருந்து 55 வயதாகவும் உயர்த்தப்படும்.

வேலையின்மை நெருக்கடியைத் தணிக்கவும், உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கத்துடனும் புதிய முதல் தலைமுறை தொழில்முனைவோர்களை உருவாக்கிடவும், தமிழ்நாடு அரசு சுயவேலைவாய்ப்பு திட்டங்களான புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது.

இவ்விரண்டு திட்டங்களின் கீழ் அதிக எண்ணிக்கையிலான படித்த இளைஞர்கள் பயன்பெறும் வகையில் உச்ச வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 35 வயதிலிருந்து 45 வயதாகவும், சிறப்புப்பிரிவினருக்கு 45 வயதிலிருந்து 55 வயதாகவும் 10 ஆண்டுகள் உயர்த்தப்படும்.

**13. கடந்த நிதி ஆண்டில் ரூ.30 கோடியாக இருந்த "தமிழ்நாடு பழங்குடியினர் / பட்டியலினத்தவர் புத்தொழில் நிதி", இந்த நிதி ஆண்டில் ரூ.50 கோடியாக உயர்த்தப்படுகிறது.**

தமிழ்நாட்டில் அனைத்து தளங்களிலும் சமூக நீதியினை உறுதிப்படுத்தும் நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் 2022-23 ஆம் நிதி ஆண்டில் 30 கோடி ரூபாய் நிதியுடன் "தமிழ்நாடு பட்டியலினத்தவர்/ பழங்குடியினர் புத்தொழில் நிதியம்" தொடங்கப்பட்டது. தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வழியாக நடைமுறைப்படுத்தப்படும் இந்த சிறப்பு நிதியமானது, பட்டியலினத்தவர் அல்லது பழங்குடியினரால் தொடங்கி நடத்தப்பட்டு வரும் புத்தாக்க செயல் திட்டங்களுடன் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு அல்லது பிணையில்லா கடனாக நிதி வழங்குவதற்காக தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் சிறப்பான வெற்றியை கருத்தில் கொண்டு, 2023-24-ஆம் நிதி ஆண்டில் இந்த நிதியானது 50 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

**14. பட்டியலின மற்றும் மாற்றுத்திறனாளி தொழில் முனைவோர்களுக்கு எளிதாக கடன் பெறுவதற்கு ஆலோசனை வழங்கி வழிகாட்ட அனைத்து மாவட்ட தொழில் மையங்களிலும் சிறப்பு வழிகாட்டி அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள்.**

பட்டியலின மற்றும் மாற்றுத்திறனாளி தொழில் முனைவோர்கள் எளிதாக கடன் பெறுவதற்கும் வெற்றிகரமாக தொழில் நடத்துவதற்கும் வழிகாட்டி ஆலோசனை வழங்க அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும் சிறப்பு வழிகாட்டி அலுவலர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவ்வலுவலர்கள் கடன் விண்ணப்பங்கள் மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் நிதி மேலாண்மை உள்ளிட்ட வழிகாட்டுதல்களை வழங்குவார்கள்.

**15. நகர்ப்புற குடியிருப்பு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்கூடங்கள் மற்றும் தொழிற் குழுமங்களை அப்பகுதியில் ஏற்படும் நெரிசலை குறைப்பதற்காக நகருக்கு வெளியே மாற்றி அமைக்க முன்வரும் தனியார் தொழிற்குழுமங்கள் மற்றும் தனியார் தொழில்முனைவோர் அமைப்புகளை ஊக்குவிக்க 75% அரசு நிதியுதவி/ மானியம் வழங்கும் திட்டத்திற்கான குறைந்தபட்ச நிலப்பரப்புத் தேவையானது பத்து ஏக்கரில் இருந்து இரண்டு ஏக்கராக குறைக்கப்படும்.**

தொழிற்கூட்டமைப்பினர் நகர்புறத்தில் இயங்கிவரும் தொழிற்கூடங்கள்/ தொழிற்குழுமங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைக்க, திட்ட மதிப்பில் 75% மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான குறைந்தபட்ச நிலப்பரப்புத் தேவையானது பத்து ஏக்கராகும். தொழிற் கூட்டமைப்பினரால் நகருக்கு அருகே நிலம் பெறுவது பெரும் சிரமமாக இருப்பதனைக் கருத்தில் கொண்டு தேவையான குறைந்த பட்ச நிலப்பரப்பு, பத்து ஏக்கரில் இருந்து இரண்டு ஏக்கராக குறைக்கப்படும். இதன் மூலம் தொழில் முனைவோர் அமைப்புகள் தங்களது தொழிற்கூடங்கள் / தொழிற் குழுமங்களை நகருக்கு வெளியே மாற்றி அமைப்பது எளிதாக்கப்படும்.

**16. தொழில்முனைவோர் அமைப்புகள் மூலம் உருவாக்கப்படும் தனியார் தொழிற்பேட்டைகளை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் 50% அரசு நிதியுதவி / மானியம் பெறுவதற்கான குறைந்தபட்ச நிலத்தேவையானது 50 ஏக்கரில் இருந்து 10 ஏக்கராக மாற்றியமைக்கப்படும்.**

தொழில் முனைவோர் அமைப்புகள் மூலம் திட்டமதிப்பில் 50% அரசு நிதி உதவி / மானியத்துடன் தனியார் தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு உதவி வருகிறது. இதற்கான குறைந்த பட்ச நிலப்பரப்பானது 50 ஏக்கர் ஆகும். தொழிற்முனைவோர் அமைப்பினரால் நிலம் பெறுவது பெரும் சிரமமாக இருப்பதனைக் கருத்தில் கொண்டு, அவர்கள் இத்திட்டத்தில் எளிதில் பயன் பெறும் வகையில் தொழில்முனைவோர் அமைப்புகள் மூலம் உருவாக்கப்படும் தனியார் தொழிற்பேட்டைகளை ஊக்குவிப்பதற்காக குறைந்தபட்ச நிலத்தேவையானது 50 ஏக்கரில் இருந்து 10 ஏக்கராக மாற்றியமைக்கப்படும்.

இதன்மூலம் தொழிற்முனைவோர் அமைப்புகள் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைப்பது எளிதாக்கப்படும்.

17. அதிகரித்து வரும் தொழில் முனைவோர்களின் தேவைக்கேற்ப புதிய தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு குறைந்து வரும் அரசு நிலத்தை சார்ந்து இருக்காமல், தமிழ்நாடு சிட்கோவே குறைந்த விலையில் தனியார் நிலத்தை விரைவாக வாங்குவதற்கு வசதியாக வரும் ஆண்டில் புதிய தனியார் நில கொள்முதல் கொள்கை (Private Land Purchase Policy) உருவாக்கப்படும்.

தொழிற்பேட்டை அமைக்க தகுதியான அரசு நிலங்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால் அதிகரித்து வரும் தொழில்முனைவோர்களின் தேவைக்கேற்ப புதிய தொழிற்பேட்டைகளை தமிழ்நாடு சிட்கோ மூலம் நிறுவுவதற்காக குறைந்த விலையில் தனியார் நிலத்தை விரைவாக வாங்குவதற்கு வசதியாக வரும் ஆண்டில் புதிய தனியார் நில கொள்முதல் கொள்கை (Private Land Purchase Policy) உருவாக்கப்படும். இதன்மூலம் தொழில் முனைவோர்களின் தேவையின் அடிப்படையில் தமிழ்நாடு சிட்கோ மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**18. தருமபுரி மாவட்டம், தருமபுரி அன்னசாகரத்தில் ரூ. 2.25 கோடி மாநில அரசு பங்களிப்புடன் ரூ. 3 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு விசைத்தறி குழுமம் அமைக்கப்படும்.**

தருமபுரி மாவட்டம், அன்னசாகரம் பகுதியில் சுமார் 200 குறு விசைத்தறி நிறுவனங்கள் 1000 தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றன. இதில் 20 நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருளான நூலினை sizing மற்றும் warping செய்வதற்கான பொது வசதி மையம், ரூ.2.25 கோடி மாநில அரசு பங்களிப்புடன், ரூ.3 கோடி திட்டமதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறுவப்படும்.

**19. கோயம்புத்தூர் நகரத்தில் மாநில அரசு மானியத்துடன் ரூ.7.33 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு பாக்கு மட்டை பொருட்கள் குழுமம் அமைக்கப்படும்.**

பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை குறைத்து இயற்கையான மாற்றுப் பொருட்களின் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் நகரத்தில் சுமார் 2000 தொழிலாளர்களுடன் இயங்கி வரும் 100 பாக்கு மட்டை பொருட்கள் உற்பத்தி செய்யும் குறுந்தொழில் நிறுவனங்களில் 20க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பயன் பெறும் வகையில் ஒரு பொது வசதி மையம், மாநில அரசு மானியத்துடன் ரூ.7.33 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறுவப்படும்.

**20. வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம் அப்துல்லாபுரத்தில் ரூ. 94.39 இலட்சம் மாநில அரசு மானியத்துடன் ரூ. 1 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு தேன் பதப்படுத்தும் குழுமம் அமைக்கப்படும்.**

வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், அப்துல்லாபுரத்தில் உள்ள சுமார் 500 விவசாயிகள் பயன் பெறும் வகையில் மாநில அரசின் ரூ. 94.39 இலட்சம் மானியத்துடன் ரூ. 1 கோடி திட்ட மதிப்பீட்டில் தேன் உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் குழுமம், குறுந்தொழில் குழும மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும்.

**21. தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நகரில் ரூ. 1 கோடி மாநில அரசு மானியத்துடன் ரூ. 1.15 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு மகளிர் எம்ப்ராய்டரிங் குழுமம் அமைக்கப்படும்.**

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் நகரில் 50 ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும் குறு நிறுவனங்கள் சுமார் 200 தொழிலாளர்களுடன் இயங்கி வருகின்றன. இதில் 25 மகளிர் தொழில் முனைவோர் பயன் பெறும் வகையில் ஆலங்குளம் நகரில் ரூ.1 கோடி மாநில அரசு மானியத்துடன் ரூ.1.15 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு எம்பிராய்டரிங் குழுமம் அமைக்கப்படும்.

**22. வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம் கரசமங்கலம் கிராமத்தில் மாநில அரசு மானியத்துடன் ரூ.3.39 கோடி திட்ட மதிப்பீட்டில் ஒரு மண்பாண்ட குழுமம் அமைக்கப்படும்.**

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கரசமங்கலம் கிராமத்தில் சுமார் 100 தொழில்முனைவோர்கள் மண்பாண்டங்கள் மற்றும் களிமண் பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் 20 தொழில்முனைவோர்கள் பயன் பெறும் வகையில் மாநில அரசு மானியத்துடன் ரூ.3.39 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு மண்பாண்ட குழுமம் அமைக்கப்படும்.

23. மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், செக்கானூரணியில், மரவேலைபாடு செய்யும் மகளிர் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ. 4.20 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

வீட்டு உபயோகத்திற்கான மரச்சாமான்கள் மற்றும் மரப்பொம்மைகள் செய்யும் மகளிர் குறுங்குழுமத்திற்கு நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் கொண்டு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், செக்கானூரணியில் மாநில அரசு மானியத்துடன் ரூ.4.20 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

**24. திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், பன்றி மலையில், காபித்தூள் தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.6.65 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

காபி கொட்டைகள் அதிக அளவில் விளையும் திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், பன்றி மலையில் உள்ள தொழில் முனைவோர்கள் காபி கொட்டைகளை அதிநவீன இயந்திரங்கள் மூலம் உலர்த்தவும், பதப்படுத்தவும் மற்றும் தூளாக்குவதற்கும் மாநில அரசு மானியத்துடன் ரூ.6.65 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் காபித்தூள் தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் அமைக்கப்படும்.

**25. தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில், செயற்கைப்பட்டு ஆடை தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.7.50 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

செயற்கை பட்டு நூலில் இருந்து குறைந்த விலை பட்டாடைகள் தயாரிக்கும் குறுந்தொழில் முனைவோர்கள் பயன் பெறும் வகையில் தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில், மாநில அரசு மானியத்துடன் ரூ.7.50 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

**26. சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், S.மாத்தூரில், ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் மகளிர் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.1.20 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் மகளிர் குறுந்தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், S.மாத்தூரில், மாநில அரசு மானியத்துடன் ரூ.1.20 கோடி திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

**27. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெடுமரத்தில் பனை ஓலை பொருட்கள் தயாரிக்கும் குறுங்குழுமத்திற்கான பொது வசதி மையம் மாநில அரசு மானியத்துடன் ரூ.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மதிப்புக்கூட்டப்பட்ட பனை ஓலை பொருட்கள் தயாரிக்கும் குறுந்தொழில் முனைவோர்கள் பயன் பெறும் வகையில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெடுமரத்தில் மாநில அரசு மானியத்துடன் ரூ.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் குறுங்குழும மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைக்கப்படும்.

**28. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மர சிற்பம் செதுக்கும் கலைஞர்கள் பயனடையும் வகையில் ரூ. 50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அரசு மானியத்துடன் குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் (MCDP) கீழ் ஒரு பொது வசதி மையம் அமைக்கப்படும்.**

குறுங்குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள மர சிற்பம் செதுக்கும் கலைஞர்களுக்கு அவர்களின் செயல்திறனை அதிகரிக்க, ரூ.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அரசு மானியத்துடன் நவீன தொழில்நுட்ப இயந்திரங்களைக் கொண்ட ஒரு பொது வசதி மையம் அமைக்கப்படும்.

**29. புத்தொழில் செயல்பாடுகளை மாநிலம் முழுவதும் பரவலாக்கும் நோக்கத்தில் சேலம், கடலூர் மற்றும் ஓசூர் ஆகிய மாவட்டங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் அமைக்கப்படும்.**

2022-2023 ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பில் தெரிவித்தபடி மதுரை, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் அமைக்கப்பட்டதன் வாயிலாக, அப்பகுதிகளில் புத்தொழில் சார்ந்த விழிப்புணர்வும் செயல்பாடுகளும் அதிகரித்துள்ளன. இதனைத் தொடர்ந்து வேளாண் தொழில் நுட்ப புத்தொழில்களை வளர்ப்பதற்காக தஞ்சாவூரில் வட்டார புத்தொழில் மையம் அமைக்கப்படும் என இவ்வாண்டு வேளாண் நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. மேலும், சேலம், கடலூர், ஓசூர் ஆகிய மாவட்டங்களிலும் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வட்டார புத்தொழில் மையங்கள் அமைக்கப்படும்.

**30. சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் புத்தொழில் (Startup) முனைவோர்கள் தங்களது உற்பத்தி நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் வகையில் ஒரு புத்தொழில் உற்பத்தி மையம் (Startup manufacturing centre) நிறுவப்படும். இதில் தகுதியானவர்களுக்கு மூன்று வருட காலத்திற்கு வாடகையில் இடம் வழங்கப்படும்.**

புத்தொழில் (Startup) முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இடத்திற்கான முதலீடு இல்லாமல் உடனடியாக உற்பத்தி செய்வதற்கு ஏதுவாக சென்னை, கிண்டி தொழிற்பேட்டையில் கட்டப்படும் அடுக்குமாடி தொழிற்கூட வளாகத்தில் ஒரு புத்தொழில் உற்பத்தி மையம் (Startup manufacturing centre) நிறுவப்படும். இதில் தகுதியானவர்களுக்கு மூன்று வருட காலத்திற்கு வாடகையில் இடவசதி வழங்கப்படும்.

**31\. புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான வளங்களை உலகளாவிய அளவில் ஒருங்கிணைக்கும் பொருட்டு துபாய் நாட்டில் "புத்தொழில் ஒருங்கிணைப்பு மையம்" அமைக்கப்படும்.**

உலக அளவில், தமிழ்நாட்டைச் சேர்ந்த புத்தொழில் நிறுவனங்களுக்கு முதலீடு திரட்டும் வாய்ப்புகளையும், சந்தை வாய்ப்புகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் அயலக வாழ் தமிழர்களின் உதவியுடன் பிற நாடுகளில் புத்தொழில் ஒருங்கிணைப்பு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. முதல் கட்டமாக துபாய் நாட்டில் இம்மையம் இவ்வாண்டு அமைக்கப்படும்.

**32. புத்தொழில் மற்றும் தொழில்முனைவு குறித்த தகவல்களை எளிதாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் இருமொழி தொலைபேசி சேவை மையம் அமைக்கப்படும்.**

புத்தொழில் மற்றும் தொழில்முனைவு குறித்த எவ்வித கேள்விகளுக்கும் தொலைபேசி வழியே பதில் அளிக்கும் விதமாக தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பதில் அளிக்கும் குழுவினரைக் கொண்ட இரு மொழி தொலைபேசி சேவை மையம் அமைக்கப்படுகின்றது. 155343- என்ற எண்ணுக்கு அழைத்து தங்களுக்கு தேவையான தகவல்களை புத்தொழில் முனைவோர்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த முன்னெடுப்பானது புத்தொழில் தொடங்க ஆர்வமாக இருப்பவர்கள், தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், வழிகாட்டுநர்கள் என அனைவருக்கும் அவர்களது செயல்பாடுகளை எளிதாக முடிக்கவும், அவர்களுக்கு தேவையான தகவல்களை பெறுவதற்கும் பேருதவியாக இருக்கும்.

**33. தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன பொருட்கள் மற்றும் சேவைகளின் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைப்படுத்துதலை மேம்படுத்துவதற்காக மெய்நிகர் (virtual pavilion) கண்காட்சியகம் உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்தோ அல்லது அலுவலகங்களிலிருந்தோ தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடைபெறும் வாங்குவோர் விற்போர் சந்தை பரிவர்த்தனைகளில் எளிதாக வணிகம் புரியும் அனுபவத்தினை வழங்க ஏதுவாக FaMeTN, மூலமாக மெய்நிகர் கண்காட்சியகம் அமைக்கப்படும். தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து கண்காட்சிகளோடு இம்மெய்நிகர் கண்காட்சியகமும் சந்தை சேவையினை கூடுதலாக வழங்கும். இம்முன்னணி தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி கொள்வதன் மூலம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் முன்னேற்றம் அடையும். முதற்கட்டமாக தென்னை நார் பொருட்கள் இம்மெய்நிகர் கண்காட்சி தளத்தில் கொண்டு வரப்படும்.

**34. தென்னை நார் தொழில் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் போட்டியினைக் கருத்தில் கொண்டு நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை ஊக்குவிக்கும் வகையில் தென்னை நார் தொழில் கொள்கை (Coir Policy) உருவாக்கப்படும்.**

தமிழ்நாடு, தென்னை நார் தொழிலில் முன்னணியில் உள்ள மாநிலம். இத்தொழில் கிராமப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதோடு மகளிர் உட்பட சமுதாயத்தில் பின்தங்கிய பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. மாற்றுப் பொருட்களின் போட்டி, சந்தை வாய்ப்பின்மை, தரக்கட்டுப்பாடு தேவை, உள்கட்டமைப்பு தேவை, தொழில்நுட்பம் மற்றும் மதிப்புக்கூட்டுதல் இன்மை, சுற்றுச்சூழல் பாதிக்காமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் தென்னை நார்த் தொழில் கொள்கையினை உருவாக்கி நீடித்த நிலையான அனைவரையும் உள்ளடக்கிய தென்னை நார்த் தொழில் வளர்ச்சியினை உறுதி செய்யப்படும்.

**35. தென்னை நார் சார்ந்த உற்பத்தி பொருட்களின் தரத்தினை உறுதி செய்ய கோயம்புத்தூரில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் பரிசோதனைக்கூடம் அமைக்கப்படும்.**

தென்னை நார் தொழில் நிறுவனங்களில் இருந்து உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைக்கு தரமான பொருட்கள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய ரூ 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூரில் பரிசோதனைக்கூடம் அமைக்கப்படும். மதிப்புக் கூட்டப்பட்ட தென்னை நார் மற்றும் துகள் பொருட்கள், தரைவிரிப்பு, கால்மிதி, ஜியோ-டெக்ஸ்டைல்ஸ், மற்றும் தென்னை நார் கலவை பொருட்கள் போன்றவற்றை பரிசோதிப்பதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள தென்னை நார் தொழிற்சாலைகளுக்கு தர உத்தரவாதம், மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு செயல்திறன், மேம்பட்ட முத்திரை நற்பெயர் (Brand), புதுமை பொருட்கள் கண்டுபிடிப்பதற்கான ஊக்கம், செயல்திறன் மற்றும் அதிகரித்த ஏற்றுமதி போன்ற பல நன்மைகளை அளிக்க இயலும்.

**36. தென்னை நார் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை பொருட்கள் என உறுதியளிக்கும் வண்ணம் தென்னை நார் சார் நிறுவனங்கள், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு இணங்க உலர்த்தும் கருவிகள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் மீது செய்யப்படும் முதலீடுக்கு மூலதன மானியத் திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் மானிய உதவி வழங்கப்படும்.**

தென்னை நார் சார் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப, இயந்திரங்கள், உலர்த்திகள் மற்றும் உபகரணங்களில் செய்யப்படும் முதலீட்டிற்கு மூலதன மானியத் திட்டத்தின் கீழ் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படும். இது தென்னை நார்ப் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த இயற்கை பொருட்கள் என உறுதிப்படுத்த உதவும்.

**37. தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலுக்கும் தென்னை நார் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கும் பயனளிக்கும் வகையில் வன நாற்றாங்கால் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக ரூ. 16 இலட்சம் மதிப்பிலான ஒரு இலட்சம் தென்னை நார் வளர்ப்பு பைகள் பயன்படுத்தப்படும்.**

சுற்றுச்சூழலுக்கு உகந்த நடைமுறைகளை நோக்கி பயணிக்கவும் வனநாற்றாங்கால்களில் பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டை படிப்படியாக குறைக்கும் வகையில் முதற்கட்டமாக பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக ரூ.16 இலட்சம் மதிப்பில் ஒரு இலட்சம் வன நாற்றாங்கால் தென்னைநார் சிறுதொட்டிகளில் தென்னை நார்த் துகள் நிரப்பப்பட்டு வனத்துறை மூலம் மரக்கன்றுகள் வளர்க்கப்படும். இவ்வாறு நடவு செய்யும் போது மரக்கன்றுகளின் வேர்கள் நீரை எளிதாக உறிஞ்சுவதோடு தக்க வைத்தும் கொள்கிறது.

**38. காலநிலை மாற்றத்தைத் தணிக்க உதவும் விதமாக மின்சாரம் மற்றும் எரிபொருள் சேமிக்க உதவும் ஆற்றல் தணிக்கை (Energy Audit) திட்டத்தின் கீழ் ஆற்றல் சேமிப்பிற்கான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்படும் மானியம் பெறுவதற்கான குறைந்தபட்ச ஆற்றல் சேமிப்பு நிபந்தனை 10 விழுக்காட்டில் இருந்து 5 விழுக்காடாக குறைக்கப்படும்.**

ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல் (PEACE) திட்டத்தின் கீழ் ஆற்றல் தணிக்கையின் பரிந்துரையை செயல்படுத்தும் போது கார்பன் டை ஆக்சைடு வெளியிடுவது மற்றும் உற்பத்தி செலவு குறைகிறது. தற்போது குறைந்தபட்சம் 10 விழுக்காடு சேமிப்பு என்பதை நடைமுறையில் எய்த முடியாத காரணத்தினால் பல குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களால் இத்திட்டத்தினை பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை. எனவே, குறைந்தபட்ச சேமிப்பு 10 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக குறைக்கப்படும்.

**39. தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் கீழ் உள்ள தொழில்முனைவோர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் 10,000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.**

தமிழ்நாட்டில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் புத்தாக்க சூழலை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும் அனைத்து மாவட்டங்களிலும் 18 வயதிற்கு மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் கீழ் உள்ள தொழில்முனைவோர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு வணிக யோசனை, வணிகத்திட்டம், சந்தைப்படுத்துதல், நிதி இணைப்பு போன்ற பயிற்சிகள் அளிக்கப்படும். இந்நிதியாண்டில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 10000 தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**40. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 12000 பெண் தொழில்முனைவோர்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்.**

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க பயிற்சிகள் வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து, மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 12000 பெண் தொழில்முனைவோர்களுக்கு 38 மாவட்டங்களில் 2023-24 ஆம் ஆண்டில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும். இப்பயிற்சியின் நோக்கமானது, சுய உதவிக் குழு பெண் தொழில்முனைவோர்களை வணிகத்தில் மேம்பாடு அடைய செய்து அவர்கள் சிறந்த பெண் தொழில்முனைவோராக உருவாக்குவதாகும்.

**41. குறு, சிறு தொழில் நிறுவனங்கள்-குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயலாக்கத்திலுள்ள குழுமங்களை வலுப்படுத்தும் வகையில் 10 குழுமங்களை சார்ந்த 300 உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் தொழில் பிரிவு சார்ந்த பயிற்சித் திட்டம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்படும்.**

தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் குழும உறுப்பினர்களின் திறனை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும், தேவை அடிப்படையிலான சந்தைப்படுத்தல் வழிகள், வணிகத் திட்டம் பற்றிய வழிகாட்டுதல்கள் மற்றும் நிறுவன செயல்பாடுகள் போன்ற பயிற்சிகள் தொழில் பிரிவு சார்ந்து வழங்கப்படும். இத்திட்டம், 2023-2024 ஆம் நிதியாண்டில், ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் குறு, சிறு தொழில் நிறுவனங்கள்-குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தற்போது செயலாக்கத்திலுள்ள கம்பளி குழுமம், ஆயுத்த ஆடை குழுமம், தீப்பெட்டிக் குழுமம், நூலாடை முறுக்குதல் மற்றும் குறுக்குதல் குழுமம், தங்க நகை குழுமம், ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரக் குழுமம், ஜவ்வரிசி குழுமம், அறைக்கலன்கள் குழுமம், கயிறு குழுமம், விவசாய உபகரணங்கள் கட்டமைப்பு குழுமம் ஆகிய 10 குழுமங்களை சேர்ந்த 300 உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

**42. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்காக பிரத்யேகமாக ஓசூரில் புதிய TAICO வங்கிக் கிளை திறக்கப்படும்.**

தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி (TAICO வங்கி) தற்போது தமிழ்நாடு முழுவதும் 47 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. அதிக எண்ணிக்கையிலான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைக் கொண்ட தமிழ்நாட்டின் முக்கிய மற்றும் வேகமாக வளரும் தொழில்துறை மையமாக ஓசூர் இருப்பதால், TAICO வங்கியின் கிளை ஓசூரில் திறக்கப்படும். இதற்கான நிதி TAICO வங்கியின் சொந்த நிதியில் இருந்து செலவு செய்யப்படும்.

**43. மதுரை, சிவகாசி, வியாசர்பாடி, திருப்பூர், சேப்பாக்கம் மற்றும் சேலத்திலுள்ள TAICO வங்கி கிளைகளில் தங்க நகை சோதனைக்கான காரட் மீட்டர்கள் ரூ.30 இலட்சம் செலவில் நிறுவப்படும்.**

மதுரை, சிவகாசி, வியாசர்பாடி, திருப்பூர், சேப்பாக்கம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் உள்ள TAICO வங்கி கிளைகளில் தங்க நகை சோதனைக்கான காரட் மீட்டர்கள் ரூ.30 லட்சம் செலவில் நிறுவப்படும். இத்தொகை TAICO வங்கியின் சொந்த நிதியில் இருந்து செலவு செய்யப்படும்.

**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்